# ஞானஸ்நானமும் இரட்சிப்பும்

*மாற்கு 16:16* மற்றும் *1 பேதுரு 3:21* ஆகியவை ஞானஸ்நானத்திற்கும் இரட்சிப்புக்கும் இடையே உள்ள தொடர்பைத் தெளிவாகக் காட்டுகின்ற இரு வசனப் பகுதிகள் ஆகும். இந்தத் தொடர்பை நாம் அதிகம் முழுமை யாகப் புரிந்து கொள்வதற்கு இந்த வசனப்பகுதிகளை கவனத்துடன் கண்ணோக்குவோம்.

## *மாற்கு 16:16*ல் இரட்சிப்புடன் ஞானஸ்நானம் எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கின்றது?

இயேசு ஞானஸ்நானத்தை இரட்சிப்புடன் - இரட்சிப்பை உண்டாக்குகின்ற வழிமுறையாக இன்றி, இரட்சிப்பைப் பெறுவதற்கான நிபந்தனையாக - இணைத்தார். NASBயில் *மாற்கு 16:16* சரியாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: "விசுவாசித்தவன் மற்றும் ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்."

### *மாற்கு 16:16*ன் அதிகாரத் தன்மை

இவ்வசனமானது பழங்காலக் கைப்பிரதிகள் சிலவற்றில் உள்ளடங்கி யிராததும், மாற்கு புத்தகத்தின் நீண்ட முடிவுப் பகுதியின் (*மாற். 16:9-20*) பாகமாக உள்ளதுமான காரணத்தினால், இதன் அதிகாரத் தன்மை பற்றிச் சிலர் கேள்வியெழுப்புகின்றனர். இப்பகுதியானது, நான்காம் நூற்றாண்டின் மிகப் பழமையான முழுக் கைப்பிரதிகளான Vaticanus (Codex B) மற்றும் Sinaiticus (Codex Aleph) என்ற புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் இல்லை. ஆனாலும், Vaticanus என்ற நூலில் *Kata Markon* ("மாற்குவின்படி") என்ற பகுதியில் 8ம் வசனத்தைத் தொடர்ந்து, ஒரு கல்வியாளர், "அடுத்த பத்தி வெறுமையாய் விடப்பட்டுள்ளது, இது Bயைப் பிரதியெடுத்தவர் தாம் பிரதி எடுத்த கையெழுத்துப் பிரதியில் காணப்படாத ஒரு முடிவுப் பகுதி உள்ளது என்பதை அறிந்துள்ளார் என்றுதான் கருத்துத் தருகின்றது ..."[1] என்று வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த நான்காம் நூற்றாண்டுக் கையெழுத்துப் பிரதிகளுக்கு முன்பு இந்த

நீண்ட முடிவு அறியப்பட்டிருந்தது. இம்முடிவின் பழம் தன்மை பற்றிக் கேள்வியெழுப்பப்பட முடியாது. "([KJV]யில் அச்சிடப்பட்டுள்ள) இந்த 'நீண்ட முடிவு' Tatian (ca. 170) அறிந்த ஒன்று என்பதும் பெரும் எண்ணிக்கையில் [ஆன கைப்பிரதிகளில்] உள்ளது என்பதும் உறுதி."[2]

இது இரேனியுஸ் (கி.பி. 130-200) அவர்களால் மேற்கோள் காட்டப் பட்டுள்ளது; Diatessaron, Codices Alexandrinus, Ephraemi மற்றும் Bezae என்ற ஐந்தாம் நூற்றாண்டுக் கைப்பிரதிகள் ஆகியவற்றில் உள்ளது. மற்றும் இரண்டாம் நூற்றாண்டின் முடிவில் எழுதப்பட்டதாக நினைக்கப்படும், நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகப் பழைய சீரியாவின் பதிப்பொன்றிலும் இது உள்ளது. ஜஸ்ட்டின் மார்டிர் (கி.பி. 100-167) தமது Apology என்ற நூலில் (1.45) இப்பகுதியிலிருந்து மேற்கோள் காட்டினார் என்று நினைக்கின்றனர். நீண்ட முடிவிற்கான மற்ற தொடக்க கால மறைவான குறிப்புகள் அல்லது இதிலிருந்து மேற்கோள்கள் ஆகியவை Hippolytus (170?-235), Aphraates ஆகியோரின் எழுத்துக்களிலும், நிக்கொதேமுவின் சுவிசேஷத்திலும், அம்புரோஸ் (337-397), எபிபெனியஸ், கிறிஸ்ஸோஸ்தோம் (345-407), மற்றும் அகுஸ்தீன் (354-430) ஆகியோரின் எழுத்துக்களிலும் உள்ளன.

இதற்கு மறுபுறத்தில், சபை வரலாற்றாளரான இசுபியஸ் (கி.பி. 264-340) அவர்கள், பல கையெழுத்துப் பிரதிகளை ஆய்வு செய்து அவைகளில் பலவற்றில் இந்த நீண்ட முடிவு அடங்கியிருக்கவில்லை என்று உண்மையை எழுதினார்.[3] ஓரிகன் (185-254), அலக்சந்திரியாவின் கிளெமென்ட் (?-215), தெர்த்துல்லியன் (160-220), மற்றும் பிறரும் கூட இதைப் பற்றி அறியாதவர்களாகவே காண்பிப்பதாகக் கூறப்படுகின்றது; இருப்பினும், இவர்கள் இதை மேற்கோள் காண்பிக்கவில்லை என்பது இவர்கள் இதை இருந்ததாக உணரவில்லை என்பதற்கோ அல்லது இதை அவர்கள் மாற்கு சுவிசேஷத்தின் முடிவாகக் கருதவில்லை என்பதற்கோ ஆதாரமாய் இருப்பதில்லை.

மாற்குவின் எழுத்தாக்கம் பற்றிய மறுப்புக்கள் உட்பட - இந்தப் பணியின் அளவுக்கு அதிகமானதும், பலத்த ஆதாரமற்றதுமான - மற்ற குறிப்புகளும் உள்ளன. மாற்கு 16:9-20 பகுதியில் உள்ள வசனங்கள் "சொல்லாக்கம், பாணி மற்றும் இறையியல் பொருளடக்கம் ஆகியவற்றில் மாற்கு சுவிசேஷத்தின் மற்ற பகுதிகளைப் போலின்றி வித்தியாசப்பட்ட தன்மையைக் காட்சிப்படுத்துவதால்"[4] இப்பகுதியானது சுவிசேஷ விபரத்தில் உள்ளடக்கப்படக் கூடாது என்று சிலர் நம்புகின்றனர்.

இவ்வசனங்களின் அதிகாரத் தன்மை பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெறுகின்றது மற்றும் இது ஒருக்காலும் முடிவு பெறாமலும் போகலாம். இவைகள் (இப்பகுதியின் வசனங்கள்) வேதாகமத்தின் பிற போதனைக்கு முரண்படாது உள்ளதால், இவை கிறிஸ்தவத்தின் தொடக்க நாட்களில் இருந்தே அறியப்பட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டும் உள்ளதால், மற்றும் இவை மாற்கு சுவிசேஷத்தின் மூல முடிவுரையாக இருக்கச் சாத்தியம் உள்ளதால், வேதத்தின் மற்ற வசனங்களுடன் இவைகளும் படிக்கப்பட்டு மதிக்கப்பட வேண்டும்.

### மாற்கு 16:16ஐப் புரிந்து கொள்ளுதல்

மாற்கு 16:16ல் "விசுவாசித்து" மற்றும் "ஞானஸ்நானம் பெற்று" ஆகிய இரண்டுமே ஒருமுறை மட்டும் நடைபெறும் வினை எச்சங்களாக உள்ளன. கிரேக்க மொழியில் ஒருமுறை மட்டுமே நடைபெறும் வினையெச்சங்கள் எப்பொழுதுமே பிரதான வினையின் செயல்பாட்டிற்கு முன்னதாகவே இடம் பெறுகின்றன, இது பிரதான வினையான "இரட்சிக்கப்படுதல்" என்பதற்கு முன்னதாகவே "விசுவாசித்தல்" மற்றும் "ஞானஸ்நானம் பெறுதல்" ஆகிய இரண்டும் நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை அர்த்தப்படுத்துகின்றது.

*The New Greek-English Interlinear New Testament* என்ற நூலில் interlinear பகுதியில் கூட, இவ்வசனத்தை மொழிபெயர்ப்பதினால் கிரேக்க வினைச் சொற்களின் வலிவு வெளிக் கொண்டு வரப்படுகின்றது: "விசுவாசம் கொண்டவராகி ஞானஸ்நானம் பெறுகின்றவர் இரட்சிக்கப்படுவார்."[5] இவ்வசனப் பகுதியில், இயேசு, "விசுவாசித்தல்" மற்றும் "ஞானஸ்நானம் பெறுதல்" ஆகியவற்றிற்குப் பிறகுதான் "இரட்சிப்பை" வைத்தார். இயேசு, "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரா(னார்)" (எபி. 5:9). நாம் இரட்சிக்கப்பட வேண்டும் என்றால், நாம் சுவிசேஷத்தை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற வேண்டும்.

## 1 பேதுரு 3:21ல் இரட்சிப்புடன் ஞானஸ்நானம் எவ்வாறு இணைக்கப்பட்டிருக்கின்றது?

மாற்கு 16:16ல் பதிவு செய்துள்ள விபரங்களை இயேசு கூறியதைக் கேட்ட பேதுரு, அதே சத்தியத்தைப் போதித்தார். "அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்" (1 பேது. 3:20) என்று பேசிய பொழுது பேதுரு பின்வரும் கூற்றையும் எடுத்துரைத்தார்: "அதற்கு ஒப்பனையான ஞானஸ்நானமானது - மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல், தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து - இப்பொழுது நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது" (1 பேது. 3:21).

இவ்வசனமானது இரட்சிப்புக்கு ஞானஸ்நானத்தை ஒரு நிபந்தனை என்ற வகையில் போதிப்பதில்லை என்பதற்குப் பல்வேறு காரணங்களைச் சிலர் உரிமைகோரியுள்ளனர். (1) நோவாவின் குடும்பம் "தண்ணீர் மூலமாக" மீட்கப்படுவதற்குப் பதில், "தண்ணீரில் இருந்து" மீட்கப்பட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். (2) இவ்வசனத்தில் ஞானஸ்நானம் என்பது ஒரு "ஒப்பனையாக" எடுத்துரைக்கப்பட்டது என்று அவர்கள் கூறுகின்றனர். (3) "மாம்ச அழுக்கை நீக்குதல்" என்றால் பாவங்களைக் கழுவுதல் என்று அர்த்தப்படும் என்பதாக இவ்வசனம் போதிக்கின்றது என்று அவர்கள் நம்புகின்றனர்.

கருத்து (1)ல் உள்ள பிரச்சனை என்னவென்றால், பேழையில் அவர்கள் "தண்ணீரிலிருந்து" அல்ல ஆனால் "தண்ணீரினாலேயே" காக்கப்பட்டனர்

*(கிரேக்கம்: dia) என்று எடுத்துரைக்கப்படுகின்றது என்பதாகும். தேவன் தண்ணீரை அனுப்பியதால்தான் பேழை அவர்களைக் காத்தது. தேவன் நெருப்பை அனுப்பியிருந்தால், அவர்கள் பேழையில் காக்கப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் இறந்து போகும்படி எரியூட்டப்பட்டிருப்பார்கள். பேழைக்குள் அவர்கள் தண்ணீர் "மூலமாகவே" காக்கப்பட்டார்கள். இது இஸ்ரவேலர்களை எகிப்தியப் படையிடம் இருந்து காத்ததும், அதே வேளையில் எகிப்தியப் படைகளை அழித்ததுமான தண்ணீருக்கு ஒப்பிடப்பட வேண்டியதாக உள்ளது (யாத். 14:13, 27-30).*

*கருத்து (2)ல் உள்ள பிரச்சனை என்னவென்றால்,* KJV*யில்* "figure" *(தமிழில் "ஒப்பனை") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள antitupon என்ற கிரேக்க வார்த்தை "உண்மை நிலை" என்ற அர்த்தம் கொண்டதாக உள்ளது.* (type - antitype: *இதில்* type *என்பது மாதிரி என்றும் அதற்கு எதிர்ப்பதமான* antitype *என்பது உண்மை நிலை என்றும் அர்த்தம் தருகின்றது.) நோவாவும் அவர் குடும்பமும் பேழைக்குள் இரட்சிக்கப்பட்டது நமது இரட்சிப்புக்கு ஒரு மாதிரி (ஒரு உருவகம்) ஆகும். நமது இரட்சிப்போ உண்மை நிலையாகும். பேழையில் உண்டான இரட்சிப்பு ஒரு மாதிரியாக இருக்க, ஞானஸ்நானம் என்பது அதன் எதிர்நிலையில் ஒரு உண்மை நிலையாக உள்ளது. இப்பொழுது ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கின்றது ஏனென்றால் அதன் மூலமாகவே நாம் பாவத்திலிருந்து பாதுகாப்பான நிலைக்குக் கடந்து வருகின்றோம், இது பேழையில் இருந்தவர்கள் மரணப் பேரழிவில் இருந்து பாதுகாப்பிற்குக் கடந்து வந்ததைப் போன்றதாக உள்ளது.*

*கருத்து (3)ல் உள்ள பிரச்சனை என்னவென்றால், ஞானஸ்நானம் இப்பொழுது நம்மை இரட்சிக்கிறது ஆனால் மாம்சத்தின் பாவத்தை அது நீக்குவதில்லை என்று கூறுவது போன்ற கூற்றுக்கள், பேதுரு தம் கூற்றுக்கு எதிராகத் தாமே பேசினார் என்று விளக்கம் அளிப்பதாக இருக்கும் என்பதாகும். பேதுரு ஞானஸ்நானத்தை நமது இரட்சிப்புடன் இணைத்தார் ஆனால் உண்மையைத் தெளிவு படுத்த விரும்பினார் என்பதே இந்தக் கூற்றைப் புரிந்து கொள்ள அதிகம் இயல்பான வழியாக உள்ளது. சரீரத்தின் புறம்பாகச் சுத்திகரித்தல் என்பதல்ல ஆனால் பாவமன்னிப்பில் காணப்படும் நல்மனச்சாட்சிக்கான நமது வேண்டுகோளாகத் தேவனிடத்தில் சமர்ப் பிக்கப்படுவதே ஞானஸ்நானத்தின் நோக்கம் என்று அவர் கூறினார்.*

---

*குறிப்புகள்*

[1]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translator's Handbook on the Gospel of Mark* (New York: United Bible Societies, 1961), 517. [2]Ralph P. Martin, *The International Standard Bible Encyclopedia,* ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1986), 236. [3]*Queastiones ad Marinum 1.* [4]Kenneth Baker, ed., notes on Mark, The NIV Study Bible (Grand Rapids, Mich.: Zondervan, 1995), 1528. [5]J. D. Douglas, ed., *The New Greek-English Interlinear New Testament,* trans. Robert K. Brown and Philip W. Comfort (Wheaton, Ill.: Tyndale House Publishers, 1993), 192.